சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. Mcop. 110/2015

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எ.ம.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி. சித்ரா கிரேட் 2 பென்ஞ் கிளார்க் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம்.சிட்டிபாபு | தொழில் | நிர்வாக அலுவலர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, வேலூர் |
| கணவர் பெயர் | | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

**06.01.2023 முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். T.S.G.3936 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆம்னி வேன் காப்பீட்டின் உண்மைநகல் **எ.ம.சா.ஆ.1,** தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

1. 14.2.2015ல் விபத்து நடந்த தேதியில் T.S.G.3936 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆம்னி வேன் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரி.

2. விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் விபத்து தேதியில் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் மனுதாரர் கோரியுள்ள விபத்து இழப்பீடு தொகையை எங்கள் காப்பீடு நிறுவனம் தான் வழங்க வேண்டுமென்றால் சரியல்ல. விபத்து தேதியில் அந்த வாகனத்தின் ஓட்டுனர், ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி உள்ளார்.

3. ஓட்டுனர் உரிமம் இல்லாதபோது வாகனத்தின் காப்பீடு விபத்து தேதியில் நிலுவையில் இருந்ததால் நாங்கள் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.